Australian Government
Fair Work OMBUDSMAN

# பணியிட நியாயம் குறித்த தகவல் அறிவிப்பு

புதிதாக வேலையில் சேரும் தொழிலாளர்கள் வேலையை ஆரம்பிக்கும் போது வேலையில் அமர்த்துவோர் இந்த ஆவணத்தை அவர்களுக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும்

## உங்களுடைய சம்பளம் மற்றும் பணியிட நிலைமைகள் குறித்த முக்கியமான தகவல்கள்

'கொரோனா வைரஸ்' தாக்கத்தின் போது உங்களுடைய பணியிட உரிமங்கள்மற்றும் கடப்பாடுள் பற்றி மேலும் அதிகமான தகவல்களை coronavirus.fairwork.gov.au என்னும் வலைத்தலத்தில் அறிந்துகொள்ளலாம்

**இந்த சட்டங்களின் கீழ் உள்ள உரிமங்களும் பாதுகாப்புகளும் ஆஸ்திரேலியாவில் உள்ள தொழிலாளர்களுக்கு உள்ளன.**

### பணியிட நியாயம் குறித்த சட்டங்கள்

- அனைத்துத் தொழிலாளர்களுக்குமான குறைந்தபட்ச உரிமங்கள்
- National Employment Standards (தேசிய பணியிடத் தரங்கள்) இதில் உள்ளடங்கும்

### ஙநிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதங்கள்

- ஒரு தொழில்துறை அல்லது வேலைக்கான குறைந்தபட்ச சம்பளம் மற்றும் பணியிட நிலைமைகளை விதிக்கிறது
- ஆஸ்திரேலியாவிலுள்ள பெரும்பாலான தொழிலாளர்களை உள்ளடக்குகிறது

### வணிக நிறுவன உடன்பாடுகள்

- குறிப்பிட்ட ஒரு வேலைத்தளத்திற்கான குறைந்தபட்ச சம்பளம் மற்றும் பணியிட நிலைமைகளை விதிக்கிறது
- ஒரு முறையான செயல்முறையின் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்புதல் பெறப்படுகின்றன

### வேலை ஒப்பந்தங்கள்

- தனிப்பட்ட ஒரு தொழிலாளிக்கான கூடுதல் நிபந்தனைகளை இவை குறிப்பிடும்
- குறைந்தபட்ச உரிமங்களைக் குறைக்கவோ அல்லது நீக்கவோ இவற்றால் இயலாது

உங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதங்களை www.fairwork.gov.au எனும் வலைத்தளத்தில் நீங்கள் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். உங்களுடைய வேலைத்தளத்தில் வர்த்தக வேலை உடன்பாடுகள் உள்ளனவா என்று www.fwc.gov.au/agreements எனும் வலைத்தளத்தில் பாருங்கள்.

**முறைசாரா (CASUAL) ஊழியர்கள்**

நீங்கள் ஒரு முறைசாரா ஊழியராக இருந்தால், நீங்கள் வேலையைத் தொடங்கும்போது உங்களுக்கு முறைசாரா வேலைவாய்ப்புத் தகவல் அறிக்கையும் கொடுக்கப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: www.fairwork.gov.au/ceis

**சம்பளம்**

**உங்களுக்கான குறைந்தபட்ச சம்பள வீதங்கள் உங்களுடைய 'நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்' (award) அல்லது 'வர்த்தக வேலை உடன்பாட்டில்' (enterprise agreement) இருக்கும்.** உங்களுடைய வேலைக்கென்று நிர்ணயிக்கப்பட்ட சம்பளமோ, ஒப்பந்தமோ இல்லையெனில், குறைந்தபட்சமாக 'குறைந்தபட்ச தேசிய சம்பளம்' உங்களுக்குக் கட்டாயமாகத் தரப்பட்டாக வேண்டும். **குறைந்த சம்பளம் கொடுக்கப்படுவதற்கு நீங்கள் சம்மதிக்க இயலாது.** குறைந்தபட்ச சம்பள வீதங்கள் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படும்.

உங்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பதை www.fairwork.gov.au/minimum-wages -இல் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

குறைந்தபட்ச தேசிய சம்பள வீதம்
1 ஜூலை 2021 - இல் இருந்து

**$20.33/மணி நேரத்திற்கு**
முழு நேரம் அல்லது பகுதி நேரம்

**$25.41/மணி நேரத்திற்கு**
அவ்வப்போது அழைக்கப்படல் (casual)

**நிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதம் அல்லது வணிக நிறுவன வேலை உடன்பாடு இல்லாத வயதுவந்த தொழிலாளர்களுக்கான சம்பள வீதங்களாகும் இவை.**
வயது குறைந்தவர்கள், தொழில் பயிலுனர்கள் மற்றும் உடலியலாமை உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பள வீதங்கள் செல்லுபடியாகக்கூடும்.

உங்களுடைய சம்பளம், விடுமுறை மற்றும் வேலைமுடிவு உரிமங்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள கீழ்க்காணும் வலைத்தளத்தில் உள்ள எமது இலவச 'கால்குலேட்டர்'களைப் பயன்படுத்துங்கள்.

www.fairwork.gov.au/pact

## தேசிய வேலைத் தராதரங்கள்

அனைத்துத் தொழிலாளர்களுக்குமான குறைந்தபட்சத் தராதரங்கள் உள்ளன. விதிமுறைகளும் விதிவிலக்குகளும் செல்லுபடியாகக்கூடும். **உங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் உங்களுக்கு இன்னும் அதிகம் கிடைக்கக்கூடும்.** www.fairwork.gov.au/NES எனும் வலைத்தளத்தில் உள்ள 'தேசிய வேலைத் தராதரங்கள்' -இல் மேலதிகத் தகவல்களைக் காணுங்கள்.

| | | முழு-நேர அல்லது பகுதி-நேரத் தொழிலாளர்கள் | | அவ்வப்போது அழைக்கப்படும் தொழிலாளர்கள் |
|---|---|---|---|---|
| **வருடாந்த விடுமுறை** | ✓ | ஒவ்வொரு வருடமும் சம்பளத்துடன் கூடிய 4 வார கால வருடாந்த விடுமுறை (நீங்கள் ஒரு பகுதி-நேரத் தொழிலாளராக இருந்தால், நீங்கள் வேலை செய்யும் நேரத்திற்கு ஏற்ப) + தகுதி பெறும் 'ஷிஃப்ட்' தொழிலாளர்களுக்கு 1 வாரம் | ✗ | |
| **சொந்த விடுமுறை** (சுகவீனம் அல்லது கவனிப்பாளருக்கான விடுமுறை) | ✓ | ஒரு வருடத்திற்கு சம்பளத்துடன் கூடிய 10 நாள் விடுமுறை (நீங்கள் ஒரு பகுதி-நேரத் தொழிலாளராக இருந்தால், நீங்கள் வேலை செய்யும் நேரத்திற்கு ஏற்ப) | ✗ | |
| **கவனிப்பாளருக்கான விடுப்பு** | ✓ | அனுமதிக்கத்தக்க ஒவ்வொரு தருணத்திற்கு 2 நாட்கள் சம்பளம் இல்லாத விடுமுறை (சம்பளத்துடன் கூடிய சொந்த விடுமுறை இல்லாவிட்டால்) | ✓ | அனுமதிக்க ஒவ்வொரு தருணத்திற்கு 2 நாட்கள் சம்பளம் இல்லாத விடுமுறை |
| **கருணை அடிப்படை விடுமுறை** | ✓ | அனுமதிக்கத்தக்க ஒவ்வொரு தருணத்திற்கு 2 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை | ✓ | அனுமதிக்கத்தக்க ஒவ்வொரு தருணத்திற்கு 2 நாட்கள் சம்பளம் இல்லாத விடுமுறை |
| **குடும்ப வன்முறைக் காரண விடுமுறை** | ✓ | 12 மாத காலத்திகு 5 நாட்கள் சம்பளம் இல்லாத விடுமுறை | ✓ | 12 மாத காலத்திகு 5 நாட்கள் சம்பளம் இல்லாத விடுமுறை |
| **சமூக சேவை விடுமுறை**<br>• ஜூரி சேவை | ✓ | 10 நாட்கள் ஈடு கட்டு சம்பளத்துடன் கூடிய விடுப்பு + சம்பளம் இல்லாத தேவைக்கேற்ற விடுமுறை | ✓ | சம்பளம் இல்லாத தேவைக்கேற்ற விடுப்பு |
| • அவசரகால சுயவிருப்பு நிர்வாக நடவடிக்கைகள் | ✓ | நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக தேவைக்கேற்ற விதத்தில் சம்பளம் இல்லாத விடுப்பு | ✓ | நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக தேவைக்கேற்ற விதத்தில் சம்பளம் இல்லாத விடுப்பு |
| **நீண்ட கால சேவை விடுமுறை** | ✓ | சம்பளத்தோடு கூடிய விடுப்பு (கால அளவும் தகுதித்தேவை விதிமுறைகளும் மாநிலங்கள் மற்றும் எல்லைப்பகுதிளுக்கிடையே மாறுபடும்) | * | மாநிலங்கள் மற்றும் எல்லைப்பகுதிளுக்கிடையே மாறுபடும் |
| **பிள்ளைப்பேறு விடுமுறை**<br>12 மாத காலம் வேலை செய்த பிறகு தகுதி பெறலாம் | ✓ | 12 மாதங்களுக்கு சம்பளம் இல்லாத விடுமுறை - முதலாளியின் சம்மதத்துடன் 24 மாதங்கள் வரையில் நீட்டிக்க இயலும் | ✓ | தொடர்ந்தும் முறைப்படியும் அவ்வப்போது அழைக்கப்படும் தொழிலாளர்களுக்கு 12 மாதங்கள் வரைக்குமான சம்பளம் இல்லாத விடுமுறை - முதலாளியின் சம்மதத்துடன் 24 மாதங்கள் வரையில் நீட்டிக்க இயலும் |
| **அதிகபட்ச வேலை நேர மணித்தியாலங்கள்** | ✓ | முழு-நேரத் தொழிலாளர்கள் – வாரத்திற்கு 38 மணி நேரம் + நியாயமான அளவிலான கூடுதல் மணித்தியாலங்கள்<br>பகுதி-நேர மற்றும் அவ்வப்போது அழைக்கப்படும் தொழிலாளர்கள் – 38 மணி நேரம் அல்லது தொழிலாளியின் வாராந்திர மணித்தியாலங்கள் (இவற்றில் எது குறைவானதாக இருக்கிறதோ அது) + நியாயமான அளவிலான கூடுதல் மணித்தியாலங்கள் | | |
| **பொது விடுமுறை நாட்கள்** | ✓ | நீங்கள் வழமையான வேலையைச் செய்துவந்தால், சம்பளத்தோடு கூடிய ஒரு நாள் விடுப்பு. உங்களை வேலைக்கு வருமாறு அழைக்கும்போது மறுப்பது நியாயமானதாக இருந்தால் நீங்கள் மறுக்கலாம் | ✓ | சம்பளம் இல்லாத விடுமுறை. உங்களை வேலைக்கு வருமாறு அழைக்கும்போது மறுப்பது நியாயமானதாக இருந்தால் நீங்கள் மறுக்கலாம் |
| **வேலை நீக்க அறிவிப்பு** | ✓ | வேலைக்கால அளவு மற்றும் வயது ஆகியவற்றின் அடிப்படையில் 1-5 வார கால முன்னறிவிப்பு (அல்லது முன்னறிவிப்பு காலத்திகான சம்பளம்) | ✗ | |
| **ஆட்குறைப்பிற்கான சம்பளம்**<br>12 மாத காலம் வேலை செய்த பிறகு தகுதி பெறலாம் | ✓ | வேலைக்கால அளவின் அடிப்படையில் 4-16 வார காலத்திற்கான சம்பளம் (சில விதிவிலக்குகள் செல்லுபடியாகும்) | ✗ | |
| **முறைசாராப் பணிமுறையில் மாற்றம்** | ✗ | | ✓ | சில சூழ்நிலைகளில் முழுநேர அல்லது பகுதிநேர ஊழியராகும் உரிமை |

Australian Government

Fair Work OMBUDSMAN

# பணியிட நியாயம் குறித்த தகவல் அறிவிப்பு

புதிதாக வேலையில் சேரும் தொழிலாளர்கள் வேலையை ஆரம்பிக்கும் போது வேலையில் அமர்த்துவோர் இந்த ஆவணத்தை அவர்களுக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும்

## உங்களுடைய சம்பளம் மற்றும் பணியிட நிலைமைகள் குறித்த முக்கியமான தகவகல்கள்

### வளைந்துகொடுக்கும் தன்மை

உங்களுக்கு 55 அல்லது அதற்கு மேற்பட்ட வயது ஆகியிருந்தாலோ, நீங்கள் ஒரு கவனிப்பாளராக, உடலியலாமை உள்ளவராக, குடும்ப அங்கத்தவர் ஒருவரால் வன்முறைக்கு ஆளானவராக (அல்லது குடும்ப வன்முறைக்கு ஆளான குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு ஆதரவுதவி செய்பவராக) இருந்தாலோ, பாடசாலை வயதில் இருக்கும் அல்லது அப்படிப்பட்ட வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தையின் பெற்றோராக அல்லது குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்புள்ளாவராக இருந்தாலோ, 12 மாத கால வேலைக்குப் பிறகு **வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள வேலை ஏற்பாடுகள் வேண்டுமென** எழுத்து மூலமாக நீங்கள் வேண்டலாம். பிள்ளைப்பேறு விடுப்பு அல்லது தத்தெடுப்பு விடுப்பிற்குப் பிறகு பிள்ளையைப் பராமரிக்கும் வகையில் பகுதி-நேர வேலைக்குத் திரும்பும் தொழிலாளர்களையும் இது உள்ளடக்கும். 21 நாட்களுக்குள் உங்களுடைய முதலாளி உங்களுக்கு எழுத்து மூலமான மறுமொழி கட்டாயம் கொடுத்தாக வேண்டும். நியாயமான வர்த்தகக் காரணங்களை முன்னிட்டு மட்டுமே அவர்களால் ‘இல்லை’ என்று சொல்ல இயலும்.

**தனிநபர் ஒருவருக்கான வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள ஏற்பாடு’ (negotiate an individual flexibility arrangement)**. ஒன்றையும் நீங்களும் உங்களுடைய முதலாளியும் பேச்சு வார்த்தை மூலமாக ஏற்படுத்திக்கொள்ளலாம். உங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் அல்லது வர்த்தக வேலை உடன்பாட்டிலுள்ள உங்களுக்குப் பொருந்தக்கூடிய சில குறிப்பிட்ட நிபந்தனைகள் இதனால் மாறக்கூடும். ‘தனிநபர் ஒருவருக்கான வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள ஏற்பாடு’ என்பது உண்மையான ஒரு தெரிவாக இருக்கவேண்டியது அவசியம் - வேலைக்கான ஒரு நிபந்தனையாக இது இருக்கக முடியாது - மற்றும் இதன் காரணமாக ஒட்டு மொத்தத்தில் உங்களுக்கு இன்னும் பலன் கிடைக்கவேண்டும். மேலதிகத் தகவல்களைப் பின்வரும் வலைத்தளத்தில் காணுங்கள்:

**www.fairwork.gov.au/flexibility**

### உங்களுக்குத் தெரியுமா?

பின்வரும் வலைத்தளத்தில் இலவசமாக ‘என் கணக்கு’ (My account) ஒன்றை உருவாக்கிக்கொண்டு உங்களுடைய வேலைத்தளம் குறித்த தகவல்களை நீங்கள் ஒரே இடத்தில் சேமித்துக்கொள்ளலாம். **www.fairwork.gov.au/register**

புதிய வேலை ஒன்றை நீங்கள் துவங்க அல்லது நீங்கள் வேலை செய்யும் இடத்தில் கடினமான உரையாடல்களை மேற்கொள்ள உங்களுக்கு உதவும் இலவச இணையவழிக் கற்கை நெறிகளைப் பின்வரும் வலைத்தளத்திற்குச் சென்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம். **www.fairwork.gov.au/learning**

நீங்கள் வேலை செய்யும் மணித்தியாலங்களை விரைவாகவும் எளிதாகவும் பதிவுசெய்து வைக்க **Record My Hours app** எனும் பயன்பாடு உதவும். App Store மற்றும் Google Play -இல் இது இலவசமாகக் கிடைக்கும்.

### வேலையை நிறுத்துதல்

உங்களுடைய வேலை இறுதியுறும்போது, சம்பளங்கள் மற்றும் நீங்கள் பயன்படுத்தாத வருடாந்த விடுப்பு மற்றும் நீண்டகால சேவை விடுப்பு போன்ற **பாக்கியுள்ள எல்லா உரிமங்களும்** உங்களுடைய கடைசி சம்பளத்தில் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

**பணி நீக்க முன்னறிவிப்பு (notice of termination)** அல்லது இதற்குப் பதிலாகத் தரப்படும் சம்பளம் ஆகியவற்றிற்கு நீங்கள் உரிமம் பெற்றவராக இருக்கக்கூடும். பாரதூரமான தவறான நடத்தையை முன்னிட்டு நீங்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால் முன்னறிவிப்பைப் பெறுவதற்கான உரிமம் உங்களுக்கு இருக்காது. நீங்கள் வேலையை ராஜினாமா செய்தால் உங்களுடைய முதலாளிக்கு நீங்கள் முன்னறிவிப்பு செய்ய வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கலாம். முன்னறிவிப்பு தேவையா மற்றும் உங்களுடைய கடைசி சம்பளத்தில் என்னவெல்லாம் உள்ளடங்கியிருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ளப் பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**www.fairwork.gov.au/ending-employment**

உங்களுடைய **வேலை நீக்கம் நியாயமற்றது** அல்லது சட்டத்திற்குப் புறம்பானது என்று நீங்கள் கருதினால், ‘பணியிட நியாய ஆணைய’(Fair Work Commission) த்திடம் கோரிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய உங்களுக்கு **21 காலண்டர் நாட்கள்** அவகாசம் உண்டு. பொருந்திவரும் விதிமுறைகளும், விதிவிலக்குகளும் உள்ளன. மேலும் அறிய பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்க:

**www.fairwork.gov.au/termination**

### வேலைத்தளத்தில் கிடைக்கும் பாதுகாப்புகள்

**அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலைத்தளப் பாதுகாப்புகள் உள்ளன.** வேலைத்தள உரிமை ஒன்றை நீங்கள் பயன்படுத்துவதன் காரணமாக, உதாரணமாக, வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள வேலை ஏற்பாடுகள் வேண்டுமெனக் கேட்கும் உரிமை, விடுமுறை எடுத்தல், அல்லது உங்களுடைய வேலையைப் பற்றி முறைப்பாடு செய்தல் அல்லது விசாரித்தல் போன்ற உரிமங்களைப் பயன்படுத்திய காரணங்களுக்காக நீங்கள் வேறு விதமாகவோ அல்லது மோசமாகவோ நடத்தப்படக்கூடாது.

தொழிற்சங்கம் ஒன்றில் சேர்வதற்கோ அல்லது சேராமல் இருப்பதற்கோ, மற்றும் சட்டப்படியான தொழில்துறை நடவடிக்கை ஒன்றில் கலந்துகொள்வதற்கோ அல்லது கலந்துகொள்ளாமல் இருப்பதற்கோ ஆன உரிமை உங்களுக்கு இருக்கிறது.

சுகவீனம் அல்லது காயத்தின் காரணமாகத் தற்காலிகமாக வேலைக்கு வராமல் இருக்கும்போதும், பாகுபாடுபடுத்தப்படுவதில் இருந்தும், உருட்டி மிரட்டப்படல், தொல்லைப்படுத்தப்படல், வலுக்கட்டாயப்படுத்தப்படல், தவறாய்ப் பிரதிநிதித்துவப்படுத்தப்படல், போலி ஒப்பந்தத்திற்கு ஆளாக்கப்படல் தேவையற்ற செல்வாக்கு அல்லது அழுத்தத்திற்கு ஆளாக்கப்படல் ஆகியவற்றில் இருந்தும் உங்களுக்குப் பாதுகாப்புகள் உள்ளன. பின்வரும் வலைத்தளத்திலிருந்து மேலதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள்:

**www.fairwork.gov.au/protections**

### உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளல்

முதளிலாளிக்கும் அவரது தொழிலாளிகள் மற்றும் எவ்வொரு தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் (உதாரணமாக, ஒரு தொழிற்சங்கம்) இடையே வர்த்தக வேலை உடன்பாடுகள் (enterprise agreements) மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயற்பாடு ‘பேரம் பேசுதல்’ எனப்படும், அத்துடன் அதற்கேயுரிய சட்டங்கள் பின்பற்றப்படவும் வேண்டும். உடன்பாடுகளை ‘பணியிட நியாய ஆணையம்’ பரிசீலனை செய்து அங்கீகரிக்கும். வர்த்தக வேலை உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல், அதை மாற்றுதல் அல்லது இறுதிப்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களுக்குப் பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:

**www.fwc.gov.au/agreements**

### வர்த்தகம் கை மாறுதல்

வர்த்தகம் கை மாறும்போது பழைய முதலாளியுடனான உங்களுடைய வேலை இறுதியுறும். நீங்கள் செய்துவந்த அதே வேலையைச் (அல்லது அதைப் போன்ற) செய்ய மூன்று மாதங்களுக்குள்ளாக உங்களுடைய புதிய முதலாளியால் நீங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் உங்களுக்குக் கிடைத்துவந்த உரிமங்களில் சில உங்களுடைய புதிய முதலாளிக்கும் பொருந்தும். வர்த்தகம் விற்கப்பட்டாலோ, வேலைகள் வேறு ஒரு நிறுவனத்திற்கு ஒப்பந்தம் மூலம் கொடுக்கப்பட்டாலோ இப்படி நடக்கக்கூடும். பின்வரும் வலைத்தளத்தில் இதைப் பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள்:

**www.fairwork.gov.au/transfer-of-business**

### உள்நுழையும் உரிமை

தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிமம் உள்ள தொழிலாளர்களுடன் பேசுவதற்கு, அல்லது சந்தேகிக்கப்படும் பாதுகாப்புப் பிரச்சினைகள் அல்லது வேலைத்தள சட்ட மீறல்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வதற்கு ‘நுழைவு அனுமதி’ (entry permit) உள்ள தொழிற்சங்க அதிகாரிகளால் வேலைத்தளத்திற்குள் நுழைய முடியும்.

முதலாளிக்குத் தெரியப்படுத்துவது போன்ற சில குறிப்பிட்ட தேவைப்பாடுகளை அவர்கள் பின்பற்ற வேண்டியது அவசியம், மற்றும் குறிப்பிட்ட ஆவணங்களை ஆய்வு செய்யவும் அவற்றைப் பிரதி எடுக்கவும் இவர்களால் இயலும். அனுமதி வைத்திருப்பவர் (permit holder) அவரது அமைப்பு மற்றும் உங்களுடைய முதலாளி ஆகியோருக்குக் கறாரான தகவல் பாதுகாப்பு சட்டங்கள் செல்லுபடியாகும். கீழ்க் காணும் வலைத்தளத்தில் இது குறித்து மேலதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள்:

**www.fwc.gov.au/entry-permits**

### யாரால் உதவ இயலும்?

**பணியிட நியாய அரச குறைகேட்பாளர்**

- சம்பளம் மற்றும் உரிமங்கள் குறித்த தகவல்கள் மற்றும் அறிவுரை
- இலவச கால்குலேட்டர்கள், பிரதிஉருக்கள் (templates) மற்றும் இணைய வழிக் கற்கை நெறிகள் (online courses)
- வேலைத்தளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உதவி
- வேலைத்தள சட்ட மீறல்களை ஆய்வு செய்வார் மற்றும் விதிமுறைகளை அமல்படுத்துவார்.

**www.fairwork.gov.au - 13 13 94**

**பணியிட நியாய ஆணையம்**

- நியாயமற்ற வேலை நீக்கம், சட்டப்புறம்பான வேலை நீக்கம், உருட்டி மிரட்டல், பாகுபடுத்தப்படல் அல்லது வேலைத்தளத்தில் ‘கடும் நடவடிக்கை’க்கு ஆட்படுத்தப்படல் ஆகியவற்றைப் பற்றிய கோரிக்கைகளைக் கேட்பார்
- வர்த்தக வேலை உடன்பாடுகளைஅங்கீகரிப்பார், மாற்றுவார் மற்றும் இறுதிப்படுத்துவார்
- நுழைவு அனுமதிகளை வழங்குவார் மற்றும் தொழில்துறை சச்சரவுகளைத் தீர்த்துவைப்பார்.

**www.fwc.gov.au - 1300 799 675**

கட்டடத் தொழில் வர்த்தகம் ஒன்றில் நீங்கள் வேலை செய்பவர் என்றால், ‘ஆஸ்திரேலியக் கட்டடம் மற்றும் கட்டுமான ஆணைய ’(Australian Building and Construction Commission)த்தினால் உதவ இயலும். **www.abcc.gov.au - 1800 003 338**

*கடைசியாகப் புதிக்கப்பட்டது ஜூலை 2021*